131. நீரே எந்தன் கோட்டை

பல்லவி

நீரே எந்தன் கோட்டை
நீரே எந்தன் துருகம்
நீரே எந்தன் அடைக்கலமானீர்
நான் நம்பியிருக்கும் கேடகமானீர்

சரணங்கள்

1. உம்மை உறுதியாக
பற்றி கொள்பவனே
பூரண சமாதானமாக
வாழ வைக்கும் வல்லவரே
- நீரே எந்தன்

2. உம்மில் பெலன் கொள்வோர்கள்
பாக்கியவான் என்றீரே
சிங்கத்தை போலவே
தைரியமாய் இருப்பார்கள்
- நீரே எந்தன்

3. உம்மை நம்புவோர்கள்
என்றைக்கும் அசையாமல்
சீயோன் பர்வதம் போல்
நிலைத்து என்றும் இருப்பார்கள்
- நீரே எந்தன்

4. பர்வதங்கள் எருசலேமை
சுற்றி இருப்பது போல
கர்த்தர் தமது ஜனத்தை
சுற்றிலும் இருந்து காக்கின்றார்
- நீரே எந்தன்